**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.32/2015**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 27.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : கந்தசாமி Father's Name : மாரப்ப கவுண்டர்

துவக்க நேரம் : 12.33 P.M.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1) நான் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள அனைத்து விசயங்களையும் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை ஆங்கிலத்தில் உள்ளது என்றாலும் அதனை எனது வழக்கறிஞர் படித்துக்காட்டி தமிழில் மொழிபெயர்ப்பு செய்தபிறகுதான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் சங்கதிகள் அனைத்தும் தெரியும் என்றால் ஆமாம்.

2) என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் 25 அடி அகல உள்ள ரோடு வேண்டுமென கோரி பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் கோரியுள்ள 25 அடி அகல ரோடு வேண்டுமென்று எதிர்கோரிக்கை பாத்தியம் கோரி பரிகாரம் கேட்டு பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிலுரையில் அவ்வாறு கோரவில்லை, 25 அடி அகலமுள்ள தடமுள்ளதாக சொல்லியுள்ளேன்.

3. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் The defendants and the plaintiffs are using the public cart - track measuring about25 feet breath since the date when they purchased their

respective landed properties after contributing a part of their landed properties to from a portion of the public cart - track for convenient and comfortable use of the plaintiffs and the defendants and the general public என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. வாதிகளின் நிலம் தடத்திற்கு மேற்குபக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்திற்கு கிழபுறம் எனது நிலம் உள்ளது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் கூறியுள்ளது போல் வாதிகளும் பிரதிவாதிகளும் சேர்ந்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை தடத்திற்கு ஒதுக்கீடு செய்து தடம் அமைக்கப்பட்டதாக கூறியுள்ளது என்றாலும் அவ்வாறு எனக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்திலிருந்து எவ்வளவு நிலம் தடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு ரோடு அமைக்க எனது பட்டா நிலத்திலிருந்து எந்த நிலமும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

5. தடம் பட்டா நிலமா, புறம்போக்கு நிலமா என்றால் புறம்போக்கு நிலம். தடம் புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளதாக நான் சொல்லும் நிலையில் அந்த புறம்போக்கு தடத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் என்னவென்று தெரியவில்லை. எனது பட்டா நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண். 176.

6. சர்வே எண்.176 பட்டா நிலமா என்றால் ஆமாம். பிரதிவாதிகளின் நிலங்களின் சர்வே எண்.176/2 என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புல எண்.177-க்கான புலவரைபடம்(வா.சா.ஆ.8) என்றால் சரிதான். இதில் சர்வே எண்.176-க்கும் 177/2 க்கும் இடையில் வேறு எந்த சர்வே எண்ணும் இல்லை என்றால் சரிதான்.

7. சர்வே எண். 177/2-ல் மொத்த நிலம் ஏக்.3.89 என்றால் சரிதான். இந்த ஏக்.3.89 -ல் வாதிகளுக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்றால் ஏக்.2.81 ஆகும். சர்வே எண். 177/2-ல் மொத்தமுள்ள ஏக்.3.89-ல் சின்னாக்கவுண்டர் மகன் முத்துசாமி என்பவர் ஏக்.0.08 நிலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

8. இதே சர்வே எண்ணில் முத்துசாமி மகன் பழனியப்பன் என்பவர் ஏக்.0.93 செண்ட் நிலம்

கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாதிகளின் நிலம், முத்துசாமி நிலம் மற்றும் பழனியப்பன் நிலம் ஆகிய மூவர்களின் நிலம் மேற்படி சர்வே எண். 177/2-ல் உள்ள ஏக். 3.89-ல் ஏக்.3.82 போக மீதி ஏக்.0.07 நிலம் மட்டும் தடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் 7 செண்ட் தடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது உண்மைதான், ஆனால் அந்த இடத்தில் தடத்துடன் சேத்து ஓடை புறம்போக்கும் உள்ளது.

9. வாதி, பழனியப்பன், முத்துசாமி ஆகியோர்கள் வாங்கிய கிரயப்பத்திரத்தில் கிரயப்பத்திர செக்குப்பந்தி மனைக்கு செல்லும் வண்டிப்பாதைக்கும் மேற்கு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 177/2-ன் தென்வடலாக கிழபுறம் 107.2 மீ என்று புலவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. சர்வே எண். 177/2-ல் 9 அடி பாதை மட்டும்தான் உள்ளது என்றாலும் நான் சொல்வதுபோல் 25 அடி அகல வண்டிப்பாதை இல்லை என்றாலும் சரியல்ல. அதனால்தான் பாதைக்கு 7 செண்ட் மட்டும் விட்டுவிட்டு மற்ற நிலங்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

11. வாதியின் பட்டா நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து 25 அடி அகலத்திற்கு பாதை அமைக்க நான் முயற்சி செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, அதில் ஓடை புறம்போக்கும் உள்ளது. தெற்கிலும் வடக்கிலும் 25 அடி அகலத்தில் மொத்த வண்டிப்பாதை உள்ளது.

12. 25 அடி அகலத்தில் நான் பாதை கேட்டுள்ள நிலையில் இந்த பாதைக்கு சரிசமமாக என்னுடைய பட்டா நிலத்தில் இடத்தை ஒதுக்க நான் தயாராக உள்ளேனா என்றால் ஏற்கனவே 25 அடி அகலத்தில் பாதை உள்ளது, என்னுடைய பட்டா நிலத்தில் நான் இதற்காக இடம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை.

13. வாதிக்கு சொந்தமான பட்டா நிலத்தில் மொத்தமாக 25 அடி அகலத்தில் வண்டிப்பைாதை அனுபவத்தை கோர எனக்கு உரிமையில்லை என்றாலும் ஏற்கனவே உள்ள 9 அடி அகலத்தில் உள்ள வண்டிப்பாதையில் மட்டும் தான் நான் அனுபவ உரிமை கோர முடியும்

என்றாலும் சரியல்ல.

14. வாதி கிரயம் பெற்றுள்ள ஆவணத்தின் அடிப்படையில் அதில் கண்டுள்ள சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கோர அவருக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். ஆனால் புறம்போக்கு தடத்திற்கும் மீதமுள்ள 7 செண்டிற்கும் அவர் முழு உரிமை இல்லாத நபர். நான் சொல்வதுபோல் அந்த இடத்தில் புறம்போக்கு நிலம் எதுவும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, அதனால் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.32/2015 , Dt.27.11.2024.